பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 08 சனிக்கிழமை 22.03.2025 கதிர் 134

## இனி இது ரகசியம் அல்ல!

வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்ட விடயத்தில் நீதிமன்றப் படியேறுவதில் தமிழ்க் கட்சிகள் உறுதியாக உள்ளன. இது பற்றி நேற்று இரு கட்சிகளின் சார்பில் கருத்துக்கள் ☞2

# எம்.பிக்களின் பென்சனை நீக்க விரைவில் வருகிறது சட்டமூலம்

## தயாராயிருங்கள் என்று ஜனாதிபதி நேற்று அறிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு வேண்டாம் என்று கடிதம் வழங்கியுள்ளேன். மாற்றத்தை என்னில் இருந்தே ஆரம்பிப்பேன். நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்கும், முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை வரையறுப்பதற்கும் உரிய சட்ட மூலம் வெகு விரைவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும். அனைவரும் கையுயர்த்தத் தயாராக இருங்கள் என்று ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க அறிவித்துள்ளார்.



வரவு செலவுத் திட்ட விவாதத்தின் நிறைவு நாளில் நேற்று உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உத்தியோகபூர்வமாக வங்குரோத்து நிலையடைந்த நாட்டையே பொறுப்பேற்றோம். இந்த ஆண்டு 4990 பில்லியன் ரூபா அரச ☞8

# 6 சந்தேகநபர்கள் சரணடைவு

முன்னாள் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கைது செய்யப்பட்ட வழக்கில் அவருடன் சந்தேகநபர்களாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏனைய 6 சந்தேகநபர்களும் நேற்று மாத்தறை நீதிமன்றில் சரணடைந்தனர்.

நகர்த்தல் பத்திரமொன்றை தாக்கல் செய்து அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகினர்.

2023 ஆம் ஆண்டு டிசம்பர் 31 துப்பாக்கிச்சூட்டில் கொழும்பு குற்றப் பிரிவின் அதிகாரி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட 8 பேரை கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றினால் பெப்ரவரி 28 பிடியாணை பிறப்பித்தது. ☞2

# வரவு செலவுத் திட்டம் 114 அதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றம்

நிதி அமைச்சரும் ஜனாதிபதியுமான அநுரகுமார திஸாநாயகவினால் மார்ச் 17 நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு 114 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

தேசியமக்கள் சக்தி ஆளும்தரப்பின் இந்தக் கன்னி வரவு செலவுத் திட்டத்தை நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான ☞2

# ஏப். 5 இலங்கைக்கு வருகின்றார் மோடி

## சம்பூர் மின்நிலைய ஒப்பந்தமும் கைச்சாத்து

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஏப்ரல் 5 இலங்கைக்கு வருகை தருவார். இதன்போது சம்பூர் மின் நிலையஒப்பந்தம்கைச்சாத்திடப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வங்குரோத்து நிலையில் இருந்து வெளியேறியதன் பின்னர் ஜப்பான் அரசின் 11 கருத்திட்டங்களும், சீனாவின் 76 கருத்திட்டங்களும் மீள ஆரம்பிக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. இதுவே ☞2

# ஜேவிபியினால் கொல்லப்பட்ட 1300 பேர் விவரம் சமர்ப்பிப்பு

## பட்டலந்த அறிக்கைக்கு ரோஹினி பதிலடி

ஜேவிபியினால் கொல்லப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள், தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் அவர்களில் 1300 பேரின் பெயர் பட்டியலை சபைக்கு சமர்ப்பிக்கின்றேன் என்று தெரிவித்து ரோஹினி கவிரத்ன எம்.பி. நேற்று அந்தப் பெயர் விவரங்களைச் சபையில் சமர்ப்பித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இரண்டாவது நாளாக இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் நிதி ☞2

# லஞ்சம் பெற்றவர்களை வெளிப்படுத்த ஜனாதிபதி ஆணைக்குழு வேண்டும்

## அமைச்சர் ஹந்துனெத்தி கோரிக்கை

இலஞ்சம் பெற்றவர்கள், பெறாதவர்கள் யார் என்பதனை வெளிப்படுத்துவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைக்கவேண்டும். இதன்படி பகிரங்கமான சுயாதீன ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைக்குமாறு நான் ஜனாதிபதியைய கோருகின்றேன் என்று கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துனெத்தி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றைய அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆளும்தரப்பு என்றவகையில் நாட்டில் அரசியல் ஜனநாயகம் மற்றும் பொருளாதார ☞7

# யாழ். மாவட்ட அபிவிருத்தி நிதி விடயத்தில் அமைச்சர் சந்திரசேகரன் செய்வது சரியல்ல

## கஜேந்திரகுமார் இடித்துரைப்பு

யாழ். மாவட்டத்திற்கு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் ரூபாயை எப்படிச் செலவு செய்யப் போகிறீர்கள் என்று அபிவிருத்திக் கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேரன் கேட்பது முறையல்ல. வடக்கு கிழக்கின் அபிவிருத்திக்கு என ஆளும்தரப்பிடம் தெளிவான திட்டம் இருக்கவேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள 500 மில்லியன் ரூபா விசேட நிதி ஒதுக்கீட்டை எவ்வாறு செலவு செய்யவேண்டும் என்று கடந்த மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் அமைச்சர் சந்திரசேகரன் யோசனை கோரியிருந்தார். ஆனால் இதுவல்ல முறை, போரால் பாதிக்கப்பட்டு 35 வருடங்கள் பின்தங்கி இருக்கும் ஒரு பிரதேசத்தில், மக்களின் பொருளாதாரம் பலவீனமாக இருக்கும் இடத்தில் முழுமையான திட்டமிடல் ஒன்று இருக்க வேண்டியது அவசியமாகும்.

அதன்படி ஆராய்ந்து நிதி ஒதுக்கப்படவேண்டும். அதனை விடுத்து கூட்டமொன்றில் அதனை எப்படிச் செலவு செய்யப் போகின்றீர்கள் ☞7

# என் கேள்விகளுக்கு என்ன பதில்? சபையில் சாணக்கியன் சன்னதம்

நாடாளுமன்றத்தில் தான் எழுப்பிய பல கேள்விகளுக்கு பதில் எங்கே என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வேட்புமனுக்கள் ஏதும் நிராகரிக்கப்படவில்லை. மன்னாரில் நிராகரிக்கப்பட்டுள்ள ஒரு வேட்புமனு தொடர்பில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வோம். நாங்கள் அனைத்து சபைகளையும் கைப்பற்றுவோம்.

கடற்றொழில் அமைச்சர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஒரு சில ☞2

# யாழ். பொது நூலக எரிப்பு மீதும் விசாரணைகள் நடத்தவேண்டும்

## யாழ்ப்பாண ஆளும்தரப்பு எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டது தொடர்பாகவும் விசாரணைக் குழு அமைத்து ஆளும்தரப்பு விசாரிக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

தெரிவிக்கப்பட்டன. தங்கள் பிழைகள் எல்லாவற்றுக்கும் மக்களை இழுத்துவிடுகிறார்கள், எல்லாவற்றையும் மக்களுக்காகத்தான் செய்தோம் என்று அவர்கள் கூறுவதைக் கேட்கத்தான் சகிக்கமுடியவில்லை.

மக்களை காப்பாற்றுவதற்காக போடப்பட்ட சட்டத்தினைக் கொண்டே தமக்கு எதிராக அநீதி இழைக்கப்பட்டுள்ளது என யாழ் மாநகரசபையின் முன்னாள் மேயர் சட்டத்தரணி மணிவண்ணன் குற்றம்சுமத்தினார். தமது பட்டியலில் இருந்த ஒரு பெண் வேட்பாளரின் ஆவணங்கள் நிராகரிக்கப்பட்டது குறித்துத்தான் அவர் இப்படிக் கூறியிருக்கின்றார். யாழ். மாவட்டத்தில் அவரது கட்சியின் 3 சபைகளுக்கான வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

''யாழ். மாநகர சபைக்கான எமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு நேற்றைய தினம் சொல்லப்பட்ட காரணம், 2023ஆம் ஆண்டு 31ஆம் இலக்க உபபிரிவு 03 தேர்தல் சட்ட ஏற்பாட்டின்படி, எமது வேட்புமனுவோடு இணைக்கப்பட்ட ஒரு பெண் வேட்பாளரின் உறுதியுரையில், சாத்தியப்பிரமான ஆணையாளர் கையொப்பமிடவில்லை என்பதே. குறித்த உறுதியுரை நிராகரிக்கப்பட்டமையின் அடிப்படையில் எமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக நேற்றுச் சொல்லப்பட்டது. மேலும் வலி. தெற்கு உடுவில் பிரதேச சபைக்கான வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு இளம் வேட்பாளர்களை உறுதிப்படுத்தும் வகையில் வழங்கப்பட பிறப்புச்சான்றிதழ் முறையாக உறுதிப்படுத்தப்படவில்லை எனக் காரணம் சொல்லப்பட்டிருக்கிறது. அதே காரணத்துடன் பருத்தித்துறை மற்றும் கரைச்சி பிரதேச சபைக்கான வேட்புமனுக்களும்ம் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ். மாநகரசபையின் போட்டியிடுகின்ற ஒரு முக்கிய தரப்பு நாம். கடைசியாக இரண்டு ஆண்டுகள் எமது தரப்பு யாழ். மாநகரசபையை ஆட்சி செய்தது. இம்முறையும் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தரப்பாக நாம் இருக்கிறோம்.

வெல்வதற்கான வாய்ப்புகளுடனும் நம்பிக்கையுடனும் தாக்கல் செய்யப்பட்ட யாழ். மாநகரசபைகான் எமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது. ஒரு பெண் வேட்பாளரால் சமர்ப்பிக்கப்பட்ட சாத்தியப்பிரமணத்திலே, உறுதிப்படுத்தி ஒரு சாத்தியப்பிரமான ஆணையாளர் கையொப்பமிடவில்லை. எனினும் அவர் தனது பதவி முத்திரையை அதில் பதிந்திருக்கிறார். இதன் காரணமாகவே மொத்தப் பட்டியலும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கான நல்லூர் பிரதேசசபையின் வேட்பு மனுவில் ஒரு வேட்பாளர் நிராகரிக்கப்பட்டபோதும், தமிழ் அரசுக் கட்சிக்கான நல்லூர் பிரதேசசபைக்கான வேட்புமனு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் கவலைக்குரிய விடயம், 2023ஆம் ஆண்டு திருத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் திருத்தச்சட்டத்தில் 31 உபபிரிவு 03 சொல்கிறது 'ஒருவர் கையொப்பமிடவில்லையெனில் நிராகரிக்கப்பட முடியாது' என சொல்கிறது.

நிராகரிக்கப்பட முடியாது என சொல்லப்பட்ட சட்டத்தை வைத்து எனது வேட்புமனுவை நிராகரித்துள்ளார்கள். மேலும் குறித்த சட்டத்தில் 31 உப பிரிவு 01 எப்பொழுது வேட்புமனு நிராகரிக்கப்படலாம் எனவும் சொல்கிறது.

அதன்படி குறித்த சட்டப்பகுதியின் 'பி' பிரிவில் மொத்த எண்ணிக்கையை கொண்ட வேட்பாளர்கள் வழங்கப்படாதவிடத்து குறித்த வேட்புமனு நிராகரிக்கப்படலாம்'.

குறித்த சட்டப்பகுதியின் 'எப்' பிரிவில் 'சட்டத்தாலே தேவைப்படுத்தப்பட்ட பெண்களையோ இளைஞர்களையோ / யுவதிகளையோ உள்ளடக்காதுவிட்டால் வேட்புமனு நிராகரிக்கப்படலாம்' என சொல்லப்பட்டிருக்கிறது. வேட்புமனுப் பத்திரத்தின்படி எமது சமர்ப்பிப்பு சரியாக உள்ளது.

31 உப பிரிவு 03இன்படி சாத்தியக் கடதாசி கையொப்பமிடப்படவில்லை எனில் குறித்த வேட்புமனு நிராகரிக்கப்படக்கூடாது என சொல்லப்பட்ட நிலையிலும் அதே சட்டத்தை வைத்து எமது வேட்புமனுவை நிராகரித்துள்ளார்கள். இது இலங்கை சட்டம் ஒழுங்கில் இருக்கக்கூடிய மிகப்பெரும் அபத்தம். குறித்த சட்டமீறலை எதிர்த்து நாம் நிச்சயமாக வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்'' என்று நீண்ட விளக்கமளித்தார் மணிவண்ணன்.

சட்டத்தரணிகள் சட்டத்தையும் விதிகளையும் தூக்கிக்காட்டி இப்படி ஏதாவது வியாக்கியானங்களையும் விளக்கங்களையும் சொல்வார்கள். கேட்கும்போது எல்லாம் நியாயமானதாகத்தான் எமக்கும் தோன்றும் இனி நீதிமன்றம்தான் முடிவுசெய்யவேண்டும், இவர்கள் சொல்வது சரியா இல்லையா என்று. என்ன இருந்தாலும் மற்றைய பல கட்சிகள் சொல்லப்பட்டதைச் சரியாகப் புரிந்துகொண்டு அதன்படி சரியாகச் செயற்பட்டன என்பதையும் இவர்கள் அப்படிச் செய்யாததன் விளைவுதான் இது என்பதையும் அவர்கள் ஏற்றுத்தானாகவேண்டும். முழுமையான அக்களை எடுத்திருந்தால் இந்த வினை வந்திருக்காது.

இதேவேளை, வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக ஜனநாயக தமிழ்த்தேசியகூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஸ் பிரேமச்சந்திரனும் அறிவித்துள்ளார்.

'கட்சிகள் சுயேச்சைக் குழுக்கள் என நாடு முழுவதும் 250 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. எம்மை பொறுத்தவரையில் ஒரே காரணத்தின் அடிப்படையிலேயே 09 வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளம் வேட்பாளர்களை உறுதிப்படுத்தும் வகையிலான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிறப்புச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாமையே நிராகரிப்புக்கான காரணமாகச் சொல்லப்பட்டுள்ளது. ஆயினும் நாங்கள் சகல சபைகளிலும் தேவையான இளைஞர்களுக்கான அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிறப்புச்சான்றிதழ்கள் வழங்கியிருக்கிறோம்.

உரிய இடத்தில் உரிய உறுதிப்படுத்தல்களுடன் பெற்றுக்கொண்ட பிறப்புசான்றிதழ்களுக்கான போட்டோபிரதிகள் சமாதானநீதிவானின் உறுதிப்படுத்தல்களுடன் வழங்கப்பட்டுள்ளன. மூலப்பிரதிகள் வழங்கப்பட வேண்டும் என எங்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை. எம்மை பொறுத்தவரையில் அவை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

சட்டத்தின் நோக்கம், குறித்த நபர்கள் இளைஞர்கள் என்பதை உறுதிப்படுத்துவதே ஆகும். இந்த விடயத்தை உறுதிப்படுத்த பிறப்பு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டைப் பிரதி வழங்குகிறோம். இவற்றை வைத்து குறித்த நபர் இளைஞரா இல்லையா என முடிவு செய்ய முடியும். இந்த நிலையில் குறித்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தவறான ஒன்று.

இது தொடர்பாக நாம் ஏற்கனவே சட்டத்தரணியுடன் பேசியிருக்கிறோம். எதிர்வரும் திங்கட்கிழமை இது குறித்த வழக்கு தாக்கல் செய்யப்படும்'' எனத் தெரிவித்தார்.

அவர் சொல்வதெல்லாம் சரிதான், ஆனால் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதிகளை மற்றைய கட்சிகளும் அவரது கூட்டணியிலேயே புளொட்டினால் தயாரிக்கப்பட்ட வேட்புமனுக்களிலும் எப்படிச் சமர்ப்பித்தார்கள் என்பதற்கான விளக்கம் ஒன்றையும் அவர் கண்டுபிடித்துச் சொன்னால் நன்றாக இருக்கும்.

எல்லோரும் பேசும்போது நன்றாகத்தான் பேசுகிறார்கள். ஆனால் செயலில்தான் கோட்டைவிட்டுவிடுகிறார்கள்.

இதேவேளை பிறப்பு சான்றிதழை உறுதிபடுத்தும் விவகாரத்தில் ஏற்பட்ட குழப்பநிலைகாரணமாகவல்வெட்டித்துறையில் சுயேச்சைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை தமக்குஎதிராக மேற்கொள்ளப்பட்ட அநீதி எனவும் இதற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் குறித்த சுயேச்சைக் குழுவின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆக மொத்தத்தில் அடுத்தடுத்த வாரங்கள் இந்த வழக்குகளால் நீதிமன்றங்கள் களைகட்டப்போகின்றன.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஏப். 5 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரத்தில் ஸ்திர நிலைமைக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

இந்திய அரசுடன் கூட்டிணைந்து சம்பூர் பகுதியில் மின் நிலையத்தை அமைப்பதற்குதீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்திய நிறுவனத்துக்கும், மின்சார சபைக்கும் 50:50 என்ற வகையில் உரிமத்தைக் கொண்டதாக கூட்டு நிறுவனம் ஒன்று ஸ்தாபிக்கப்படும். இதனூடாக சம்பூர் பகுதியில் 120 மெகாவோட் மின்னுற்பத்தி நிலையம் ஸ்தாபிக்கப்படும். மின்சார சபை இதனைக் கொள்வனவு செய்யும். குறைந்தளவான விலையில் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வருகை தருவார். இதன்போது சம்பூர் மின்நிலைய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும். பொருளாதார ஸ்திரத்தன்மைக்கான உறுதிப்பாட்டை வழங்கியுள்ளோம். மன்னாரில் 50 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யப்படும் காற்றாலை திட்டம் ஆரம்பிக்கப்படும் - என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## யாழ். பொது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

வடக்கு மாகாணம் என்பது கல்வியில் தலைசிறந்து விளங்குகின்றது. இந்நிலையில் ஜனாதிபதியினால் வரவு செலவுத் திட்டத்தில் யாழ். நூலகத்திற்கு 100 மில்லியன் ரூபாவை ஒதுக்கியமைக்காக நன்றிகளை கூறிக்கொள்கின்றேன். எமது நாட்டில் 30 வருடங்களாக நிலவிய போரின் மூலக் காரணங்களில் ஒன்றாக யாழ். நூலக எரிப்பு உள்ளது.

இப்போது பட்டலந்த வதை முகாம் தொடர்பில் பேசுகின்றனர். இங்கு தமிழ், சிங்கள இளைஞர்களின் இறப்புக்கு காரணமானவர்களே அன்றைய காலத்தில் கல்வி அமைச்சராக இருந்தபோது எமது யாழ். நூலகத்தையும் தமிழர்களின் உணர்வுகளையும் எரித்து நாசமாக்கினர். இதற்கான விசாரணையும் தேவையாகும்.

போரால் 30 வருடங்களாக நாங்கள் பின்தங்கியிருக்கின்றோம். தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி சிங்கள இளைஞர்களும் இந்தப் போருக்குள் தள்ளப்பட்டு உயிரிழந்துள்ளனர். இவர்கள் சாதாரண அம்மா அப்பாக்களின் பிள்ளைகளே. இதற்குக் காரணமாக இருந்த அப்போதைய கல்வி அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திலும் இருந்தார் என்ற தகவல்கள் உள்ளன.

இதனால் பட்டலந்த வதைமுகாம் போன்று யாழ். நூலகத்தை எரித்தமை தொடர்பில் விசாரணை குழுவை அமைத்து நீதியை தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும என்று இந்த சபையில் வேண்டிக்கொள்கின்றேன் - என்றார்.

## ரணிலிடம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறுத பெயர் பட்டியலை சபைக்கு சமர்ப்பித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள், உறுப்பினர்கள் என ஆயிரக்கணக்கானோரை ஜேவிபியினர் கொலை செய்துள்ளார்கள். இந்தியாவுடன் இணைந்து பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தக் கொலைகளைச் செய்தார்கள். இதில் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் இதர கட்சியினருடன் சேர்ந்தவர்களும் உள்ளடங்குகின்றனர்.

ஆளும்தரப்பு படலந்த அறிக்கையை முன்வைக்கும்போது சபாநாயகர் கவலைப்பட்டார். அதனால் ஜே.வி.பியினால் கொலை செய்யப்பட்டவர்களின் நிலைதொடர் பிலும் சபாநாயகர் கவலைப்படுவார் என நினைக்கிறேன். அவர்களில் 1300 பேரின் பெயர் பட்டியலை சபைக்கு சமர்ப்பிக்கிறேன். இந்தப் பட்டியலில் இடம்பெறாதவர்களின் பெயர்களை பட்டலந்த விவாதத்தின்போது முன்வைக்க நடவடிக்கை எடுப்பேன்.

அத்துடன் இவ்வாறு கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் 920 பேரின் பெயர்ப் பட்டியலையும் சபைக்கு சமர்ப்பிக்கிறேன். இந்திய எதிர்ப்பின்போது கொலைசெய்யப்பட்ட 41,813 பேருக்கும் நீதி கிடைக்கவேண்டும். அதனால் எந்த மனித புதைகுழியை தோண்டினாலும் இறுதியில் எஞ்சப்போவது கவலை மாத்திரமே -என்றார்.

## 6 சந்தேகநபர்கள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி டி சில்வாவும் இதில் உள்ளடங்கியிருந்தார். பிடியாணை பிறப்பிக்கப்பட்டு 20 நாட்களுக்கு பின்னர் தேசபந்து தென்னகோன் பத்திரமொன்றை தாக்கல்செய்து மாத்தறை நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் சரணடைந்தார். அவரை ஏப்ரல் 03 வரை அவர் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களில் ஒருவர் ஏற்கனவே வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார் என்று விசாரணைகளை முன்னெடுத்துள்ள அதிகாரிகள் நீதிமன்றத்திற்கு அறிவித்தனர்.

## என் கேள்விகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களை குறிப்பிட்டுள்ளார். தேர்தலில் வெற்றிப்பெறுவதற்காக தலைவர் பிரபாகரனின் பெயரைக் குறிப்பிடும் நிலைக்கு இவர்கள் வந்திருப்பதையிட்டு வாழ்த்துகிறோம். நீங்கள் வாயால் மாத்திரமே வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தி பற்றி பேசுகின்றீர்கள். நிறைவடைந்த ஆறுமாத ஆட்சியில் எதனையும் செய்யவில்லை என்பதைக் குறிப்பிட்டுக்கொள்கிறோம்.

வட மாகாணத்துக்கு நீங்கள் ஏதும் செய்யவுமில்லை, செய்யபோவதுமில்லை என்பதை வாக்களித்த மக்கள் தற்போது விளங்கிக்கொண்டார்கள். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை பற்றிப் பேசும் நீங்கள், உடளகம,மற்றும் பரணமக ஆணைக்குழு மற்றும் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் பற்றிப் பேசவில்லை. இதனைப் பற்றி நாம் குறிப்பிடும்போதே அமைச்சர் சபையை விட்டு வெளியேறுகிறார்.

வரி நிவாரணம் மற்றும் வரி விதிப்பு தொடர்பில் ஆளும்தரப்பின் கொள்கையை நான் பலமுறை கேள்விக்குள்ளாக்கினேன். சிகரெட் நிறுவனத்துக்கு மாத்திரம் 56 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய நிறுவனங்களுக்கு 96 சதவீத அளவில் வரி அறவிடப்பட்டுள்ளது. ஏன் சிகரெட் நிறுவனத்துக்கு மாத்திரம் சிறப்பு சலுகை என்று கேள்வியெழுப்பினேன். ஆனால் இதற்கு இதுவரையில் பதிலளிக்கவில்லை.

மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கியில் ஒரு தரப்பினர் பெற்றுக்கொண்ட கடன் இதுவரையில் அறவிடப்படாத நிலையில் அந்தக் கடன்களை மீளப்பெறுவதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று வினவினேன். இதுவரையில் பதில் இல்லை. இந்த ஆளும்தரப்பு நடுத்தர மக்களுக்குப் பெரும் அநீதி இழைத்துள்ளது.

தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க 2004ஆம் ஆண்டு விவசாயத்துறை அமைச்சராக பதவி வகித்தபோது பொது மேலாளராக ஜயகொடி, மனிதவள முகாமையாளராக மல்லிகா ஆராய்ச்சி, தொழில்நுட்ப முகாமையாளராக திசாநாயக்க என்பவரையும் நியமித்துள்ளார். 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த மனித வள முகாமையாளர் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜயகொடி என்பவர் உர கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றியுள்ள நிலையில், நிதிமோசடியில் ஈடுபட்டுத் தப்பித்துச் சென்றுள்ளார். இதனால் ஆளும்தரப்புக்கு 40 மில்லியன் ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. அந்த நபர் இந்த அமைச்சரவையில் உள்ளார். இந்த விடயத்தின் உண்மை தன்மையை ஆளும்தரப்பு வெளிப்படுத்தவேண்டும் அல்லது அந்த நபர் அமைச்சு பதவியைத் துறக்கவேண்டும் -என்றார்.

## வரவு செலவுத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநுரகுமார திசாநாயக்கா நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றியிருந்தார்.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் அரசின் வருமானமாக 4990 பில்லியன் ரூபாவும் செலவீனமாக 7190 பில்லியன் ரூபாவும்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# போதைப்பொருளை ஒழித்து இளைஞருக்கான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுப்போம்

## ஐக்கிய சமாதான கூட்டமைப்பு திடசங்கற்பம்

(பாறுக் ஷிஹான்)

போதைப்பொருளைஒழித்துஇளைஞர்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்காக காரைதீவு பிரதேச சபைக்கு ஐக்கிய சமாதான கூட்டமைப்பு தனித்துப்போட்டியிடுவதாக அக்கட்சியின் வேட்பாளர்கள் தெரிவித்தனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் அலுவலகத்தில் 2025 ஆண்டிற்கான காரைதீவு பிரதேச சபைக்கு ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உப தலைவர் கலாநிதி ஹக்கீம் செரீப் மற்றும் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் இணைப்புச் செயலாளர் ஏ.எம். அகுவர் ஆகியோர் தலைமையில் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற பின்னர் விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

மேலும் அங்கு அவர்கள் கருத்து தெரிவிக்கையில் - 2025 ஆண்டிற்கான உள்ளூராட்சி மன்ற தேர்தலில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பானது கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ கொட்டிகாவத்தைபுத்தளம்மாவட்டத்தில் கல்பிட்டி ஆனடுவ ஆராய்ச்சிகட்டு பகுதிகளிலும் திருகோணமலை மாவட்டத்தில்குச்சவெளியிலும்அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பகுதியிலும் போட்டியிடுகின்றது. இத்தேர்தலில் எப்படியாவது வெற்றி பெற வேண்டும் என்பதற்காக எமது இளைஞர்கள் இறக்கியுள்ளனர்.



இதனூடாககாரைதீவுபிரதேசசபையில் அதிகளவானஆசனத்தைஐக்கியசமாதான கூட்டமைப்பு பெற்றுக்கொள்ளும். ஊழலற்ற ஆட்சி ஒன்றை எமது கட்சி மேற்கொள்ளும்.இந்த பிரதேசசபையின் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மாற்றம் என்பது எங்களை ஏமாற்றிவிடக் கூடாது. ஒரு மாற்றத்தில் வருகின்றவர்களின் பின்புலம் பலமானதாக இருக்க வேண்டும். இத்தேர்தலில் ஊழலற்றஏமாற்றத்திற்கு எதிரான செயற்பாட்டை சரியாக செய்யக்கூடிய பொதுச்சேவைகளை செய்கின்ற இளைஞர்கள் முன்வந்து போட்டியிடுகின்றனர்.

எதிர்காலத்தில் மாளிகைக்காடு மாவடிப்பள்ளி உள்ளிட்ட காரைதீவு பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில்மக்கள்நலன்கருதிபல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.இரு சமூகம் சார்ந்த பிரதேச சபையாக காரைதீவு பிரதேச சபை இருப்பதால் எமது ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சி ஊடாக ஐக்கிய சமாதானத்தை ஏற்படுத்தி பாரிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதுடன் போதைப்பொருளை ஒழித்து இளைஞர்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம் என குறிப்பிட்டனர்.

# சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை கட்டம் கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட செயலக பழைய வளாகத்தில் குறித்த சந்தைக்கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் சு.முரளிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொண்டு குறித்த கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக பிரசிடென்ட் ஆஃபர் சிலோன் நிறுவன உத்தியோகத்தர் சின்னத்தம்பி சூரியகுமாரி கலந்து கொண்டனர்.

குறித்தநிகழ்வில்மாவட்ட செயலகபதவிநிலைஉத்தியோகத்தர்கள், உத்தியோகத்தர்கள்,சிறுதொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். 113









# யாழ். ஜனாதிபதி மாளிகையை வருமானம் ஈட்டும் வழியில் பயன்படுத்தப்படவேண்டும்

## சத்தியலிங்கம் கோரிக்கை



பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்ட யாழ்.ஜனாதிபதி மாளிகையை பொதுமக்கள் பாவனைக்காகவும், தேசிய பொருளாதாரத்துக்கு வலுசேர்க்கும் வகையிலும் பயன்படுத்த வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் சத்தியலிங்கம் அரசாங்கத்திடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றியதாவது-

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் அமைச்சுக்களின் பிரதான அமைச்சாக நிதி மற்றும் பொருளாதார திட்டமிடல் அமைச்சு காணப்படுகிறது. பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் நிதி வளம் மற்றும் திட்டமிடல் மிகவும் முக்கியமானது. பொருளாதார மேம்பாட்டுக்காக கொண்டு வரும் சகல திட்டங்களுக்கும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

இருப்பினும் இந்த சபையில் பேசும் ஓரிரு விடயங்கள் வெட்கத்துக்குரியன. யுத்த முடிவடைந்ததன் பின்னர் மரண அச்சத்தில் தான் வாழ்ந்தோம். கடந்த ஆட்சியாளர்கள் மற்றும் அரசாங்கங்கள் நிதி முகாமைத்துவத்தில் விட்ட பிழைகளால் தான் இந்த நாடு இன்று கையேந்துகிறது.

யுத்தம் முடிவடைந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்திகள் தொடர்பில் கடந்த அரசாங்கங்கள் அவதானம் செலுத்தவில்லை. பயனற்ற வகையிலான திட்டங்களுக்கு அதிக முதலீடுகள் செய்யப்பட்டன.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பாரிய போராட்டத்துக்கு மத்தியில் தான் குடியமர்த்தப்பட்டார்கள். இரண்டு தகரங்களுக்கு கீழ், மரத்துக்கடியில் தான் வாழ்ந்தார்கள்.இவ்வாறான பின்னணியில் யாழ்ப்பாணத்தில் பல கோடி ரூபா செலவில் ஜனாதிபதி மாளிகை நிர்மாணிக்கப்பட்டது. இதனால் எவ்வித பயனும் மக்களுக்கு கிடைக்கவில்லை.

பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்ட யாழ்.ஜனாதிபதி மாளிகையை பொதுமக்கள் பாவனைக்காகவும், தேசிய பொருளாதாரத்துக்கு வலுசேர்க்கும் வகையிலும் பயன்படுத்த வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். - என்றார்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# இரட்டை முக ரணில்

விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களை ரணில் விக்கிரமசிங்க 2002இல் தொடங்கினார். இலங்கை வரலாற்றில் நீண்ட காலம் தாக்குப்பிடித்த இந்த உடன்படிக்கைக் காலத்தில் பல சுற்றுப் பேச்சுக்கள் பல நாடுகளில் நடத்தப்பட்டன. அவற்றில் ஒஸ்லோவில் நடத்தப்பட்ட பேச்சுக்களில் உள்ளக சுயநிர்ணய உரிமை குறித்துப் பரிசீலிப்பதற்கு இணங்குவதாக ரணில் தரப்பின் பேச்சுக் குழுவினர் அறிவித்தனர். ரணிலின் இணக்கத்துடனேயே அந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால், 20 வருடங்கள் கடந்து 2022இல் ரணில் அரசுத் தலைவரானபோது அந்த நிலைப்பாட்டில் அவர் இருக்கவேயில்லை. அதற்குட்பட்ட காலத்திலேயே அவரது கருத்து நிலைப்பாடு தொடர்ச்சியாக மாற்றம்பெற்று வந்திருந்தமை வெளிப்படையானது. உள்நாட்டில் அரசியல் கள நிலமைக்கு ஏற்பட, சிங்கள பௌத்த வாக்குகளின்தேவைக்கேற்பஅவர்தனதுநிலைப்பாட்டைமாற்றுவதில் வல்லவராக இருந்தார். கடைசியில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுதான் தனது தீர்வு என்பதாக அவரது நிலைப்பாடு மாற்றியது. துரதிர்ஷ்டவசமாக அவர் அந்த நிலைப்பாட்டில்கூட உறுதியானவராக இருந்ததில்லை. சிங்களப் பிக்குகள் சிறு எதிர்ப்புக்காட்டி அரசமைப்பின் பிரதிகளை எரித்த உடனேயே அவர் பின்வாங்கிக்கொண்டு பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் சிலைக்குள் தன்னை மறைத்துக்கொண்டார்.

இப்போது, அவரிடமிருந்து மீண்டும் அதேபோன்றதொரு வெளிப்பாடு வந்துள்ளது. போர்க் குற்ற விசாரணைகள் குறித்த விடயத்தில் 2015இல் அவர் தமிழர்கள் மத்தியில் வெளிப்படுத்தி வந்த நிலைப்பாட்டிலிருந்து, இப்போது தனிச் சிங்கள வாக்குகளைக் குறிவைத்து அவர் பின்வாங்குகின்றார். தேர்தல்களில் மிக மோசமான தோல்விகளை அடைந்த பின்னர், தனது அரசியல் மீள் எழுச்சியை அடிப்படையாகக் கொண்டு, போர்க் குற்ற விசாரணைகள் உள்நாட்டிலேயே நடத்தப்படவேண்டும் என்று தற்போதைய ஆளும்தரப்பிடம் கேட்கிறார். சர்வதேச விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறார்.

''மனித உரிமை தொடர்பில் 2015ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அவை நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே இது குறித்த எந்தவொரு விசாரணையும் உள்ளக மட்டத்திலேயே முன்னெடுக்கப்படவேண்டும். சர்வதேச விசாரணைகளை ஏற்றுக்கொள்ளமுடியாது. ஜெனீவா கூட்டத்தொடரில் இந்தநிலைப்பாட்டை உறுதியாக அறிவிக்கவேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இரட்டைநிலைப்பாட்டைக் கடைப்பிடித்து இலங்கையையும் உக்ரைனையும் வித்தியாசமாக நடத்துகிறது. எதற்காக அவர்களுக்கொரு சட்டம் எமக்கொரு சட்டம்? சுதந்திர நாடாக இலங்கையை சுயாதீனமாக செயற்பட அனுமதிக்க வேண்டும்'' என்றார்.

2015இல் பதவியேற்ற இவரைப் பிரதமராகவும் மைத்திரிபால சிறிசேனவை அரசுத் தலைவராகவும் கொண்ட ஆளும்தரப்புத்தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைப் போரில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை விசாரிப்பதற்கான கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றை, அதாவது பொதுநலவாய நாடுகளின் பிரதிநிதிகளான வழக்குத் தொடுநர்கள், சட்ட வல்லுநர்களைக் கொண்ட நீதிமன்றப் பொறிமுறை நிறுவுவோம் என்று ஏற்றுக்கொண்டது. பின்னர் அதனை அவர் செய்யவில்லை. தமிழர்களுக்கு எதிரான பொறுப்புக்கூறல் விடயத்தில் அவர் எதையும் செய்யவில்லை.

பிரதமராகத் தனது ஆட்சிக் காலத்தின் அந்தத்தில் இத்தகைய பொறிமுறை இலங்கைக்கு இப்போதைக்கு ஏற்புடையதல்ல என்று அவர் பேசத் தொடங்கினார். இப்போது சர்வதேச விசாரணைக்குச் செல்லமுடியாது என்று அடித்துச் சொல்கின்றார். ரணில் நம்பப்பட முடியாதவர் என்ற நிலைப்பாட்டை எடுத்து தமிழ் மக்கள் அவருக்கு வாக்களிக்காது விடும் சூழலை இதுபோன்ற விடயங்கள்தான் உருவாக்கின. இனியோரு போதும் தமிழர்கள் தனக்கு வாக்களிக்கப்போவதில்லை என்பதைப் புரிந்துகொண்டிருக்கும் ரணில் இப்போது வெளிப்படையாகவே விசத்தைக் கக்கத் தொடங்குகிறார். அவரது அரசியல் போக்கிலித்தனம் இது.

# ஓய்வூதியத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

## கொடுப்பனவுகளை உடன் வழங்குக என ரவிகரன் வலியுறுத்து



கடந்த 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டுவரை அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு நாட்டின் நிலைமை காரணமாக கோட்டாபய அமைச்சரவையால் ஓய்வூதியக்கொடுப்பனவுகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், ஓய்வூதியத்தை எதிர்பார்த்திருந்த 2000இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுகளை உரியவர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதித் திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சின் மீதான வரவு,செலவுத்திட்ட குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

சபைக்கு தலைமை தாங்கும் கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சர், பிரதி அமைச்சர் அவர்களே, வட மாகாண ஓய்வூதியர் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் அமைப்பு தங்களுக்குள்ள குறைகளை இப்படித் தெரிவிக்கின்றார்கள் என்பதை ஓய்வூதியர்களின் நலன் கருதி தங்களிடம் சமர்ப்பிக்கின்றேன்.

கடந்த 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டுவரை ஓய்வுபெற்றவர்களுக்கு 2020-01-01 இல் வழங்குவதற்குரிய ஓய்வூதியமானது நாட்டின் நிலைமை காரணமாக கோட்டாபய அமைச்சரவையால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக தேசிய மக்கள் சக்தி சார்பான ஓய்வூதியர் சங்கத்தினர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து போராட்டங்களையும் முன்னெடுத்து வந்தனர். வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அப்போது அவ்வாறு போராடிய தேசிய மக்கள் சக்தி ஆதரவு தொழில் சங்கங்கள் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தால் இப்பிரச்சினை தீர்க்கப்படும் என நம்பிக்கையூட்டி வந்தனர்.

இந்நிலையில் 2016ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டுவரை ஓய்வுபெற்ற பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் தேசிய மக்கள் சக்தியின் முதலாவது வரவு, செலவுத் திட்டத்தில் இதற்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்திருந்தனர்.

அதாவது 2020ஆம் கிடைக்கவேண்டிய ஓய்வூதியக் கொடுப்பனவு 2025 ஆம் ஆண்டுவரை,ஐந்தாண்டுகளாக பெறமுடியாது காத்திருந்தவர்களுக்கு தற்போது வரவு - செலவுத் திட்டத்தில் அந்தக் கொடுப்பனவு மூன்று கட்டங்களாக 2027வரை வழங்க காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளளது.

இக்கொடுப்பனவு பெறவேண்டிய 2000 பேரளவிலான ஓய்வூதியர்கள் இறந்து விட்டனர். இந்நிலையில் தற்போதைய அரசும் ஓய்வூதியர் வாழ்வுக் காலம் பற்றி சிந்திக்காது, குறித்த ஓய்வூதியக்கொடுப்பனவு வழங்குவதை மேலும் மூன்றாண்டுகளுக்கு பிற்போட்டுள்ளதென கவலையடைகின்றனர்.

கௌரவ அமைச்சர் அவர்களே, கௌரவ பிரதி சபாநாயகர் அவர்களே மக்களுக்கான அரச பணியில் தங்களுடைய கரிசணையைப் பண்பாக செய்து, இன்று ஓய்வில் இருக்கும் சேவையாளர்களை நிம்மதியாக ஓய்வுக் காலத்தை கழிப்பதற்கு உதவி செய்யுங்கள். அந்தக் கொடுப்பனவுகளை கூடிய விரைவில் உரியவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# நூல் வெளியீடு

வளர்ந்து வரும் தொழில்நுட்பத்தை, மனித தலைமுறையை உருவாக்க பள்ளிப் பாட அமைப்பில் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பம் ஒரு பாடமாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டம் உட்பட தகவல் மற்றும் தொடர்பு தொழில் நுட்பம், கணினி அடிப்படை உணர்தல் எனும் நூல் வெளியீடு ; சனிக்கிழமை மினுவாங்கொடை நகரசபை நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்தநூலைபிரபலகணனிதொடர்பிலான நிபுனரும், விரிவுரையாளருமான,ஆசிரியர் எல். எம். ரிஸ்லான் சிங்கள மொழியில் எழுதி இருந்தார்.

மேற்படி நூல் வெளியீட்டு விழாவின் சிறப்புவிருந்தினர்களாககளனிபல்கலைக்கழக சமஸ்கிருதம் மற்றும் சர்வதேச சமயத் துறையின் மூத்த பேராசிரியர் சங்கைக்குரிய இந்துராகாரே தம்மரத்தன ஹிமி, அமேசன் கல்லூரி மற்றும் அமேசன் கம்பஸின் முகாமைத்துவ பணிப்பாளரும், உளவியல் ஆலோசகர் - பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி விரிவுரையாளர் இல்ஹாம் மரிக்கார், மேல் மாகான முன்னாள் முதலமைச்சரும் கல்வி மாநகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ரெஜி ரணதுங்க கல்வி புலமைப்பரிசில் நிதியத்தின் தலைவர் பிரசன்ன ரணதுங்க, முன்னாள் நீதி மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, தினமின பத்திரிகையின் முன்னாள் இணை ஆசிரியரும் ஊடக ஆலோசகருமான சிரேஷ்ட ஊடகவியலாளர் தனுஷ்க கொடகும்புர, மூத்த ஊடகவியராளர் கலா பூஷணம், லேக்ஹவுஸ் நிறுவனத்தின் முன்னால் தமிழ் ஊடக ஆலோசகர் எம்.ஏ.எம். நிலாம் (ஈழுத்து நூன்) ஆகியோரும் கலந்து கொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# வடமாகாணத்திலுள்ள அரச காணிகளில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுங்கள்

## காணி ஆணையாளர் நாயகத்திடம் வடக்கு ஆளுநர் வலியுறுத்து

மாகாணத்திலுள்ள அரச காணிகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள், காணி ஆணையாளர் நாயகம் சந்தனவிடம் கோரிக்கை முன்வைத்தார்.

வடக்குமாகாண ஆளுநரின் அழைப்பின்பேரில் வருகை தந்துள்ள காணி ஆணையாளர் நாயகம் மற்றும் அவரது குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக நடமாடும் சேவையை முன்னெடுத்தனர்.

இதனைத்தொடர்ந்து மாகாணமட்டத்திலான பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் உயர்மட்டக் கலந்துரையாடல் கிளிநொச்சியிலுள்ள வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகத்தில் வடக்கு மாகாண ஆளுநரின் பங்கேற்புடன் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்றது.

இதில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண காணி ஆணையாளர் சோதிநாதன் -

கடந்த இரண்டு நாள்களில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின்போது பிரச்சினைக்குரிய காணிகளை நேரடியாகச் சென்று பார்வையிட்டு தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

அரச காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் ஊடாக 500 மில்லியன் ரூபா வருமானம் இந்த ஆண்டு பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம். மேலும், வடக்கு மாகாணத்தில் 18,273 பேர் காணிகள் இல்லாமல் உள்ளனர்.

இதனைவிட, வெளிப்படுத்தல் உறுதி மூலமாக சட்டவிரோதமாக காணிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளும், குளங்களின் நீரேந்துப் பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளும் வடக்கில் நடைபெறுகின்றன. - என்று குறிப்பிட்டார்.



இதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் -

மக்கள் காணிப் பிரச்சினைக்காக பிரதேச செயலகங்களுக்கும், மாவட்டச்செயலகத்துக்கும் பல தடவைகள் அலைந்து திரிவதாகக் குறிப்பிட்டார். இவ்வாறான நடமாடும் சேவைகள் குறிக்கப்பட்ட காலத்துக்கு ஒரு தடைவ நடைபெறுவது சிறப்பானது என்றும் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம் மேலதிக மாவட்டச் செயலர் - காணி க.சிறிமோகன் -

வனவளத்திணைக்களம் மற்றும் வனஉயிரிகள் திணைக்களத்தின் காணி ஆக்கிரமிப்பால் முதலீட்டாளர்களுக்குகூட காணிவழங்கமுடியாத நிலைமை இருப்பதை தெரியப்படுத்தினார். மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலர்களும் இதே விடயத்தைச் சுட்டிக்காட்டினர். இது தேசிய ரீதியான பிரச்சினை என காணி ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். தேசிய ரீதியான பிரச்சினை என்ற போதும் வடக்கு மாகாணமே அதிகமாக இதன் பாதிப்பை எதிர்கொள்வதாகச் சுட்டிக்காட்டிய ஆளுநர், போரால் மக்கள் இடம்பெயர்ந்ததை காரணமாக்கி எந்தவொரு அதிகாரிகளுக்கும் தெரியாமல் வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டார். இது தொடர்பில் உயர்மட்டக்கலந்துரையாடலுக்கான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என காணி ஆணையாளர் நாயகம் பதிலளித்தார்.

மேலும், கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் எடுக்கவேண்டிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என காணி ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டார். 113



காலைக்கதிர் Kalaikkathir

# வேட்புமனுவில் கையொப்பம் இடச்சென்ற நபர் தப்பியோட்டம்

## மட்டக்களப்பில் சம்பவம்

நடைபெறவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு அனைத்து அரசில் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பிரயத்தனங்களை மேற்கொண்டிருந்தன.

இந்நிலையில் போரதீவுப்பற்று உள்ளூராட்சி மன்றத்திற்கு வேட்பாளரை தேர்வு செய்வதற்கு அரசியல் கட்சி ஒன்று மிகவும் பிரயத்தனத்தில் ஈடுபட்டிருந்தது.

இந்நிலையில் அப்பிரதேசத்திலுள்ள வட்டாரம் ஒன்றில் போட்டியிடுவதற்காக அப்பகுதியைச் சேர்ந்த ஒருவரை அரசியற்கட்சி ஒன்று கட்டாயத்தின் பெயரில் அவர்களுடைய வாகனத்தில் ஏற்றிக் கொண்டு விண்ணப்பத்தில் கையொப்பம் இடுவதற்காக களுவாஞ்சிகுடிப் பகுதியில் அமைந்துள்ள அக்கட்சிக் காரியாலயத்திற்கு புதன்கிழமை சென்றுள்ளனர்.

குறித்த நபரை ஏற்றிக் கொண்டு சென்ற வாகன சாரதி அக்காரியாலயத்தின் முன்னால் அமைந்துள்ள வீதியில் வாகனத்தை நிறுத்திவிட்டு உள்ளே செல்லுங்கள் என குறித்த நபரிடம் கூறியுள்ளார். ஆனாலும் அந்த நபர் நான் உள்ளே சென்று கையொப்பம் இடுகின்றேன் எனக்கூறிவிட்டு அருகிலிருந்த பற்றைக் காடுகள் ஊடாக தப்பி ஓடிய கால்நடையாகவே நடந்து போரதீவுப் பற்றுப் பிரதேசத்திலுள்ள அவரது வீட்டிற்குச் சென்று சேர்ந்துள்ள சம்பவம் பதிவாகியுள்ளது.

அரசியல்கட்சிஒன்றின்வாகனத்தில்சென்ற நீங்கள் ஏன் நடந்து வருகின்றீர்கள் என அவரது வீட்டிலுள்ளோரும், கிராமத்தவர்களும் அவரிடம் வினவியுள்ளனர். 'எனக்கு அரசியல் சரிவராது என்னால் முடியாது, முடியாது, என தெரிவித்திருந்தும் என்னை கட்டாயத்தின் பெயரிலேயே ஏற்றிக் கொண்டு சென்றனர். நான் அவர்களின் தேர்தல் பிடியிலிருந்து அவர்களுக்குத் தெரியாமலேயே தப்பிப் பிழைத்து கடந்து வந்துவிட்டேன்' என பதிலளித்துள்ளார்.

இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் அரசியற்கட்சிகளும், சுயேச்சைக்குழுக்களும் மிகவும்பிரயத்தனத்திற்கு மத்தியிலேயேதான் அனுபவமில்லாதவர்களையும், கல்வியறிவு குறைந்தவர்களையுமே களமிறக்கியுள்ளதாக அரசியல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஆசிரியருக்கான பயிற்சியில் வளவாளராக கிழக்கு ஆளுநர்

(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரட்ணசேகர அண்மையில் புதிதாக நியமணங்களை பெற்ற ஆசிரியர்களுக்கான இரண்டு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகளில் முக்கிய வளவாளராகப் பங்கேற்றார்.

புதிதாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான இரண்டு வழிகாட்டுதல் நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.



# உரிமைகளிற்கான எங்கள் போராட்டத்தை இனவாதமாக அர்த்தப்படுத்த வேண்டாம்

## தையிட்டி காணி உரிமையாளர்கள் கொழும்பில் இடித்துரைப்பு




உரிமைகளிற்கான எங்களின் போராட்டத்தை இனவாதமாக அர்த்தப்படுத்த வேண்டாம்எனநாங்கள்தென்னிலங்கை மக்களை கேட்டுக்கொள்கின்றோம் என தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிகளின் உரிமையாளர்களில் ஒருவரான சுகுமார் சாருஜன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நிலஉரிமைகளிற்கான மக்கள் கூட்டமைப்பின் ( பார்ள்) ஏற்பாட்டில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உட்பட பல அரசாங்கங்கள் எங்கள் நிலங்களை எங்களிடம் தருவதாக உறுதியளித்தன.

ஆனால் இது தொடர்பான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இலங்கையின் அரசமைப்பின் ஊடாக பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்டுள்ள அங்கீகாரமே இந்த விவகாரம் தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்க முடியாதமைக்கு காரணம் என நாங்கள் கருதுகின்றோம்.

இவை எங்கள் மூதாதையர்களின் நிலங்கள்,அங்குள்ள பௌத்த ஆலயத் தின் மதகுரு கூட இந்த நிலம் எங்களிற்கு சொந்தமானது என்பதை ஏற்றுக்கொண் டுள்ளார்.

ஆனால் அவர் இதனை பொதுவெளியில் தெரிவிக்க தயங்குகின்றார்.

எங்களின் இந்த போராட்டம் சிங்கள மக்களிற்கோ அல்லது பௌத்தமதத்திற்கோ எதிரானது இல்லை. எங்கள் நிலங்களை மீளப்பெறுவதற்காகவே நாங்கள் போராடுகின்றோம்.

உரிமைகளிற்கான எங்களின் போராட் டத்தை இனவாதமாக அர்த்தப்படுத்த வேண்டாம் என நாங்கள் தென்னிலங்கை மக்களை கேட்டுக்கொள்கின்றோம்.

# சாரணர் சங்கத்தால் ஊடகப் பயிற்சி நெறி!

(றிபாஸ்)

இலங்கை சாரணர் சங்கத்தின் ஊடகப்பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மூன்று நாள் ஊடகப்பயிற்சி பாசறை சப்புகஸ்கந்த மாகொலயில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஆரம்பமானது.

பிரதம சாரண ஆணையாளரின் வழிகாட்டலின் கீழ் ஊடகத்திற்கு பொறுப்பான உதவி பிரதம ஆணையாளர் பிரபாத் குலரத்ன தலைமையில் நடைபெற்ற இந்த ஊடகப்பயிற்சி பாசறைக்கு வடக்கு கிழக்கு உட்பட சகல மாவட்டங்களிலிருந்தும் ஊடகத்திற்குப் பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள் கலந்து கொண்டனர்.

ஊடகம் மற்றும் மக்கள் தொடர்வு எனும் தலைப்பில் வெள்ளிகிழமை தொடக்கம் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்றுக்கொண்டிருக்கும் இப்பயிற்சி நெறியினை ஊடகத்துறையில் பலவருட அனுபவங்களைக்கொண்ட ஊடகவியலாளர்களால் ஊடகம் தொடர்பிலான பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.









காலைக்கதிர் Kalaikkathir

## லஞ்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதையே எதிர்பார்க்கின்றோம். இப்போது அரசியல் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டுள்ளது. எமது ஆளும்தரப்பிலுள்ள 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொருளாதாரம் தொடர்பாகவும் மற்றும் சட்டத்தை செயற்படுத்தல் தொடர்பாகவும் தலையிடுவதில்லை. எம்மில் எவரும் சட்டவாட்சியில் தலையீடு செய்வதில்லை.

அத்துடன் பொருளாதார ஜனநாயகம் இருப்பதாலேயே அதிகாரிகளுக்கும் சுதந்திரமாக செயற்பட முடிகின்றது. நாங்கள் முதலீடுகளை கொண்டு வருவதில் தரகுப் பணம், இலஞ்சம் பெறாத காரணத்தினாலேயே முதலீடுகளும் அதிகரித்துள்ளன. கடந்த ஆட்சியில் போட்டிப் போட்டுக்கொண்டு தரகு பணத்தை பெறுவர். எவ்வளவோ காணிகளைப் பெற்றுள்ளனர். வாயில் புனிதச் சொல் வயிற்றில் வேட்டை, இறைச்சி என்பது போன்றுதான் எதிர்தரப்பில் இருக்கும் சிலரின் கதைகள் உள்ளன.

வெள்ளை ஆடை அணிந்து கொண்டுள்ள திருடர்களை வெளிப்படுத்தவேண்டும். இலஞ்சம் பெற்றவர்கள், பெறாதவர்கள் யார் என்பதனை வெளிப்படுத்துவதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைக்கவேண்டும். இதன்படி பகிரங்கமான சுயாதீன ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைக்குமாறு நான் ஜனாதிபதியை கோருகின்றேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் தங்களிடம் இலஞ்சம் பெற்றவர்கள் தொடர்பான தகவல்களை சத்தியக் கடதாசி மூலம் வெளிப்படுத்துவதற்குத் தயாராக முதலீட்டாளர்கள் பலர் இருக்கின்றனர். ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் அமைச்சுப் பதவிகளை பெற்றிருந்த, கட்சித் தாவிய பலர் இலஞ்சம் பெற்றவர்களே.

இப்போது தேசபந்துவைக் கைது செய்யவில்லை என்று எம்மிடம் கேட்டவர்கள் கடந்த காலங்களில் அவரை உடைக்குள் மறைத்து வைத்துக்கொண்டு ஆட்சி செய்தவர்களே. இப்போது சட்டத்தரணிகள், சொலிசிட்டர் ஜெனரல் போன்றோரால் சுதந்திரமாகப் பேச முடிகின்றது. ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் தேசபந்து தொடர்பில் கூறியிருந்தால் அவ்வாறானவர்கள் இருந்திருக்க முடியுமா?

கடந்த நாடாளுமன்றத்தில் சபாநாயகர் திரும்பி பார்த்தாலோ, பஸில் ராஜபக்ச எழுந்தாலோ சிறுநீர் கழித்தவர்கள் இப்போது நாடாளுமன்றத்தில் சத்தமிடுகின்றனர். மகிந்த ராஜபக்ச வெளியில் போகும்போது அவரின் பின்னாலேயே போனவர்கள் இப்போது நிலையியல் கட்டளைகளை மீறும் போதும் நாங்கள் அமைதியாக பார்த்துக்கொண்டிருப்பது ஏன்? நாங்கள் அரசியல் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வந்தவர்கள் என்பதால்தான்.

இதுவரை நடந்த விவாதங்களில் எமது அமைச்சர்களில் எவராவது ஒரு ரூபாவாவது திருடியுள்ளனர் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதா? எதுவும் கிடையாது. பலர் சம்பளம் இன்றி எங்களுடன் இணைந்து பணியாற்றுகின்றனர். இவர்கள் மண்டியிட்டுக் கொண்டிருந்த சர்வதேச நாணய நிதியத்திற்கு முன்னால் நாங்கள் முதுகெலும்புடன் நிற்கின்றோம். இதுவே இவர்களுக்கு பிரச்சினையாக இருக்கிறது என்றார்.

## யாழ். மாவட்ட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று கேட்பது முறையல்ல. அங்கு வரும் பதில் சரியானதாக இருக்காது என்று தெரிந்துகொண்டு அந்த நிதியை தாங்கள் விரும்பியபடி பயன்படுத்தக்கூடிய வகையில் மட்டுமே அந்தக் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு போரால் பாதிக்கப்பட்ட பிரதேசம். அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதென்றால் ஆக்கக்குறைந்தது முழுமையான தேவைகளைக் கண்டறியக்கூடிய முழுமையான ஆய்வுகளைச் செய்த பின்னரே நிதி ஒதுக்கீட்டைச் செய்யவேண்டும். அதனைச் செய்யாமல் நாங்கள் முடிவுகளை எடுத்தால் அந்த மக்களின் உண்மையான அபிவிருத்தியை அடைய முடியாது.

கிடைக்கும் நிதியை எப்படிக் பயன்படுத்தப் போகின்றோம் என்று மக்களுக்குப் படம் காட்டும் வகையில் கூறி மக்களை ஏதோவொரு வகையில் சமாளித்து மிகப்பெரிய நிதியை வேறு வேறு இடங்களுக்குக் கொண்டு சென்று பயணிப்பதற்காக மட்டும் நிதி ஒதுக்கீடு நடக்கின்றதே தவிர அந்த பிரதேசத்தை உண்மையிலேயே கட்டியெழுப்பி அந்த மக்களின் பொருளாதாரத்தை பாதுகாத்து பலப்படுத்தும் முயற்சியாக இது இருக்கப் போவதில்லை - என்றார்.

## எம்.பிக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவாய் எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில், கடன்களுக்கான வட்டி செலுத்தலுக்கு 2950 பில்லியன் ரூபா, அரச சேவையாளர்களுக்குச் சம்பள ஒதுக்கீடு 1352 பில்லியன் ரூபா, ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான ஒதுக்கீடு 4042 பில்லியன் ரூபா என்ற அடிப்படையில் காணப்படுகின்றது. மிகுதி 256 பில்லியன் ரூபா. இதுவே தற்போதைய பொருளாதார நிலைமை. ஆகவே, அவசரமடையக் கூடிய நிலையில் பொருளாதாரம் இல்லை என்பதை முதலில் விளங்கிக் கொள்ளுங்கள்.

அரசநிறுவனங்களின் கடன் மற்றும் நட்டம் ஆகியவற்றை எதிர்கொண்டுள்ளன. வருடாந்தம் இந்த நிலைமையே காணப்படுகின்றது. ஈட்டிக் கொள்ளும் வருமானத்தைக் காட்டிலும் செலவுகள் அதிகளவில் காணப்படுகின்றது. பொருளாதாரத்துக்கு இயைவானதாக செயற்படும் நிறுவனங்களுக்கு இடையில் பெரும் இடைவெளி காணப்படுகின்றது.

பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் எம்மிடம் பல கேள்விகள் காணப்பட்டன. ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போதே நாணய நிதியத்தின் செயற்திட்ட யோசனை முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டில் இருந்து விலகுவோம் என்றே ஒரு தரப்பினர் எதிர்பார்த்தார்கள்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். முழுமையான அரசை நான்கு மாதங்களுக்கு முன்னரே அமைத்தோம். பொருளாதாரஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தினோம். கடந்த டிசம்பர் மாதம் 21ஆம் திகதி வங்குரோத்து நிலையில் இருந்து வெளியேறினோம். பிரதான கடன் வழங்குநர்களுடன் இணக்கமான தீர்மானத்துக்கு வந்துள்ளோம்.

வங்குரோத்து நிலையடைந்ததால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டோம். கடவத்தை - மீரிகம அபிவிருத்திக்குச் சீன எக்சிம் வங்கி கடன் வழங்கியது. வங்குரோத்து என்று அறிவித்ததன் பின்னர் சீன வங்கி கடன் வழங்கலை இடைநிறுத்தியது. இந்த அபிவிருத்திப் பணிகள் இடைநிறுத்தப்பட்டதால் நிர்மாணிப்பு கம்பனிக்கு 46 பில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது. இது ஒரு எடுத்துக்காட்டு மாத்திரமே.

இந்த மூன்று மாத காலங்களில் இறைவரித் திணைக்களம் மற்றும் சுங்கத் திணைக்களம் ஆகியவற்றின் வருமானம் எதிர்பார்த்த நிலைமை காட்டிலும் அதிகரித்துள்ளது. இந்த சாதக நிலையை தொடர்ந்து மேம்படுத்திக்கொள்வோம்.

அரச சேவையாளர்களின் அடிப்படை சம்பளம், மேலதிக கொடுப்பனவு மற்றும் இதர கொடுப்பனவுகள் அனைத்தும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இந்த சம்பள அதிகரிப்பு எதிர்வரும் மாதம் முழுமையாக கிடைக்கப்பெறும்.

உழைக்கும்போது செலுத்தும் வரி திருத்தம் செய்யப்பட்டுள்ளது. சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, வினைத்திறனான சேவையை எதிர்பார்க்கின்றோம்.

நாடாளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு வேண்டாம் என்று கூறும் வழங்கியுள்ளேன். மாற்றத்தை என்னில் இருந்தே ஆரம்பிப்பேன். கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினருக்கான ஓய்வூதியக் கொடுப்பனவையும், ஜனாதிபதிக்கான கொடுப்பனவையும் பெற்றுக்கொண்டு பலர் திருட்டுப் பூனை போல் இருந்துள்ளார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அமைச்சரானதன் பின்னர், உறுப்பினருக்கான கொடுப்பனவும் கிடைக்கப்பெறும், அமைச்சருக்கான கொடுப்பனவும் வழங்கப்படும். கரண்டி கையில் உள்ளதால் இவர்கள் தமக்கு வேண்டியதைப் போன்று பரிமாற்றிக் கொண்டார்கள்.

என் அரசின் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் அமைச்சு , பிரதி அமைச்சு பதவிகளுக்கான கொடுப்பனவுகளை மாத்திரமே பெறுகின்றார்கள். இந்த நாட்டை திருத்துவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம். மக்களின் வரிப்பணத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்துகின்றேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்வதற்கும், முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை வரையறுப்பதற்கும் உரிய சட்டமூலம் வெகுவிரைவில் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும். அனைவரும் கையுயர்த்தத் தயாராக இருங்கள்.

10 இலட்சமாகக் காணப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான காப்புறுதி கொடுப்பனவு 2 இலட்சத்து 50 000 ரூபாவாகக் குறைக்கப்படும். கோவப்பட வேண்டாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவருக்கும் வாகன இறக்குமதிக்கான அனுமதிபத்திரம் கிடையாது. நாட்டைக்

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# ரணிலைத் தூக்கில் போட்டாலும் எமக்குப் பிரச்சினை ஏதுமில்லை

## நாடாளுமன்றில் மனோ கணேசன் தெரிவிப்பு

ரணில் விக்ரமசிங்கவை தூக்கில் போட்டாலும் எங்களுக்கு பிரச்சினை இல்லை. ஆனால் உள்ளாட்சித் தேர்தல் பரப்புரைக் காலத்தில் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பான விவாதத்தை நடத்தாதீர்கள். நிலைமையைப் புரிந்துகொண்டு செயற்படுங்கள் என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் தெரிவித்ததாவது:

தனியார் பல்கலைக்கழகம் தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு நிலைப்பாடுகள் தற்போதைய ஆட்சியாளர்களுக்கு இருந்தன. ஆனால் தற்போது அது மாறி இருக்கும் என நினைக்கிறேன். மாறவேண்டும். அதனால் சர்வதேச பல்கலைக்கழகங்கள் உத்தியோகபூர்வமாக நாட்டுக்குள் வருவதற்கு இடமளிக்கவேண்டும். அன்று அம்பந்தோட்டை எண்ணெய்ச் சுத்திகரிப்பு தொடர்பில் நாங்கள் நடவடிக்கை எடுக்கும்போது சீனாவின் கொலனி ஒன்றை அமைக்கப்போவதாக தெரிவித்திருந்தீர்கள். அதேபோன்று திருகோணமலை எண்ணெய் குதங்கள் தொடர்பில் கதைக்கும்போது இந்தியாவின் கொலனி அமைக்கப்போவதாக ஜேவிபியின் பொதுச்செயலாளர் டில்வின் சில்வா போராட்டக் களத்துக்கு வந்து தெரிவித்திருந்தார். தற்போது எல்லாம் மாறி இருக்கிறது. அதனால் எமது மாணவர்கள் சர்வதேச பல்கலைக்கழகங்களில் இணைந்து படிப்பதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். அதற்காக சர்வதேச பல்கலைக்கழகங்களை நாட்டுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக எமது ஆதரவை வழங்கத் தயாராக இருக்கிறோம்.

அதேவேளை மதுபானசாலை உரிமை பத்திரம் பெற்றுக்கொண்டவர்களின் பட்டியலை சபைக்கு சமர்ப்பிப்பதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரை சமர்ப்பிக்கவில்லை. ரணில் விக்ரமசிங்க மதுபானசாலை உரிமைப்பத்திரம் வழங்கி அரசியல்வாதிகளை தனது பக்கம் இழுத்துக்கொண்டார் எனத் தெரிவித்தார். அப்படியானால் அந்த பெயர் பட்டியல் எங்கே எனக் கேட்கிறோம். இந்த ஆளும்தரப்பு பட்டியல் ஆட்சி என்றே தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மதுபானசாலை உரிமை பத்திரம் பெற்றுக்கொண்டவர்கள் என பட்டியல் ஒன்றை வெளியிட்டிருந்தார். அதேநேரம் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வைத்திருப்பவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட்டிருந்தார். அதேபோன்று ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் பெற்றவர்களின் பெயர் பட்டியலை வெளியிட்டார்கள். ஆனால் இந்த எந்த பெயர் பட்டியலிலும் எனது பெயர் இல்லை. 2001இல் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கிறேன். மதுபானசாலை பத்திரம் எடுக்கவும் இல்லை. வேறு அனுமதி பத்திரங்கள் எடுக்கவும் இல்லை. அரசியல் தேவைக்கோ எனது சொந்தத் தேவைக்கோ ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பணம் பெற்றதும் இல்லை. அதேபோன்று அரச சொத்துக்களைத் துஷ்பியோகம் செய்ததும் இல்லை. எனது கரங்கள் தூய்மையானதாகும்.

மேலும் ஆளும் தரப்பு தேர்தல் மேடைகளில் தெரிவித்த பல விடயங்களை மாற்றி இருக்கிறது. அதுபோன்றே ஆளும் தரப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு அவர்களின் வாகனச் சிறப்புரிமைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். மேடைகளில் என்ன தெரிவித்திருந்தாலும் பரவாயில்லை அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய வாகனங்கள், வீடுகளை வழங்குங்கள். அப்போதுதான் அவர்களால் சேவை செய்ய முடியும். வாகன அனுமதி பத்திரம் 2016இல் நிறுத்தப்பட்டது. தற்போது அதனை வழங்க முடியும். கொழும்பில் இருப்பவர்களுக்கு அது தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் தூரப் பிரதேசங்களில் இருப்பவர்களுக்கு இந்த வரப்பிரசாதங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்

பட்டலந்த விவாதம் இடம்பெற இருக்கிறது. என்றாலும் இந்த காலப்பகுதியில் உள்ளூராட்சி மன்ற தேர்தல் பரப்புரைகளும் இடம்பெற இருக்கின்றன. அதனால் இந்த விவாதத்தை பிற்படுத்துமாறு தெரிவிக்கும்போது ரணில் விக்ரமசிங்கவை பாதுகாக்கப்போவதாக தெரிவிக்கின்றீர்கள். நாங்கள் ரணில் விக்ரமசிங்கவை ஒருபோதும் பாதுகாக்க முற்படவில்லை. ரணில் விக்ரமசிங்கவை தூக்கில் போட்டாலும் எங்களுக்கு அது பிரச்சினை இல்லை. நிலைமையை புரிந்துகொண்டு செயற்படுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

# கடல் இழுத்துச் சென்ற மாதல் இளைஞன் சாவு

கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டு மாதகலில் இளைஞன் ஒருவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டார் என்று இளவாலைப் பொலிசார் தெரிவித்தனர்.

இனுவில் பகுதியில் இருந்து இளைஞர் குழுவொன்று மாதகல் கடற்கரையில் களியாட்டத்திற்காகச் சென்றுள்ளது. 11 மணிக்கு கடற்கரைக்கு வருகை தந்த அவர்கள் 3.15 மணியளவில் கடலில் குளிக்க சென்றுள்ளனர் .

இந்நிலையில் இணுவிலைச் சேர்ந்த சாருஜன் எனும் 20 வயதான இளைஞர் கடலில் குளித்துக்கொண்டிருந்த பொழுது அலையினால் அடித்து செல்லப்பட்டுள்ளார். பொதுமக்கள் பொலிசாரின் உதவியுடன் அவரை மீட்பதற்குத் தேடுதல் நடத்தப்பட்டது ஆனால் மாலை 5.30 மணியளவில் அவரது உடலை மட்டுமே மீட்க முடிந்தது.



இளைஞனின் உடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் இளவாலை பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றன.

## வரவு செலவுத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காட்டப்பட்டது. தூண்டுவிழும் தொகையாக 2200 பில்லியன் ரூபா.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் பெப்ரவரி 18 முதல் 25 வரையிலான 7 நாட்கள் இடம் பெற்று பெப்ரவரி 25 வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆதரவாக 155 வாக்குகளும் எதிராக 46 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 109 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பின்போது அரசு தரப்பினருடன் இணைந்து ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆதரவாக வாக்களித்திருந்தார். சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, ஜீவன் தொண்டமான் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சி, நாமல் ராஜபக்ச பிரதிநிதித்துவப்படுத்தும் பொது ஜன பெரமுன, ரவி கருணாநாயக்க பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய ஜனநாயக முன்னணி, கஜேந்திரகுமார் பிரதிநிதித்துவப்படுத்தும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் எதிராக வாக்களித்தன .

அதேவேளை, சிறீதரன் தலைமையிலான தமிழ் அரசுக் கட்சியும், சுயேட்சைக்குழு 17 இன் தலைவரான அருச்சுனாவும் உட்பட 23 பேர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. அதனைத் தொடர்ந்து வரவு செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்திற்கு 19 நாட்கள் ஒதுக்கப்பட்டு பெப்ரவரி 27 முதல் மார்ச் 21 வரையில் விவாதம் இடம்பெற்றது. நேற்று மாலை 7,40 மணி அளவில் விவாதம் முடிவுக்கு வந்து. விவாதத்தின் முடிவில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக வாக்கெடுப்பைக் கோரினார்.

இதனையடுத்து இடம்பெற்ற வாக்கெடுப்பிலேயே 2025ஆம் ஆண்டுக்கான கன்னி வரவு செலவுத் திட்டத்தின் மீதான மூன்றாவது வாசிப்பு 114 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக அரசுடன் இணைந்து எதிர்தரப்பிலுள்ள தொழிலாளர் கட்சியினைச் சேர்ந்த காதர் மஸ்தான் வாக்களித்தார். எதிராக சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி. ஜீவன் தொண்டமான் பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சி, நாமல் ராஜபக்ச பிரதிநிதித்துவப்படுத்தும் பொது ஜன பெரமுன, ரவி கருணாநாயக்க பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய ஜனநாயக முன்னணி, கஜேந்திரகுமார் பிரதிநிதித்துவப்படுத்தும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், அர்ச்சுனா தலைமையிலான சுயேச்சைக்குழு 17 ஆகியன எதிராக வாக்களித்தன. இந்த வாக்களிப்பிலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பங்கேற்கவில்லை அத்துடன் 20 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவில்லை.

## எம்.பிக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டியெழுப்ப அரசியல்வாதிகள் அர்ப்பணிப்பு செய்வார்களாயின், அரச சேவையாளர்களும் ஒத்துழைப்பு வழழுங்குவார்கள்.

வேலையில்லா பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு சிறந்த முறையில் தீர்வு காணப்படும். 35 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனங்கள் வழங்கப்படும். தகுதிகளின் அடிப்படையில்தான் அனைவருக்கும் நியமனங்கள் வழங்கப்படும். முறையற்ற வகையில் நியமனங்களை வழங்க முடியாது. கடந்தகால அரசுகள் முறையற்ற வகையில் அரச சேவைகளுக்கு நியமனங்களை வழங்கியதால்தான் அரச சேவை கட்டமைப்பு இன்று நெருக்கடிக்குள்ளாகியுள்ளது. ஆகவே, இதனை மாற்றியமைக்க வேண்டும். அரசியலுக்காக இந்த விடயத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு தொடர்பில் உபகுழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. குறித்த அறிக்கை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வெகுவிரையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சிறந்த மாற்றத்தை எதிர்பார்த்துள்ளோம். அனைவரும் முறையாக வரி செலுத்த வேண்டும். வரி மோசடி செய்பவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். செலுத்தப்படும் வரியின் ஒவ்வொரு ரூபாவும் சிறந்த முறையில் பயன்படுத்தப்படும் என்று வரிச்செலுத்துவோருக்கு உறுதியளிக்கிறேன். வரி செலுத்துங்கள். நாங்கள் அதனைப் பாதுகாக்கிறோம். வரி செலுத்துவோருக்கு விசேடசலுகை பொதிகள் வழங்கப்படும். வரி செலுத்தும் வர்த்தகர் வீதியில் வாகனத்தை நிறுத்தி வைத்து காத்துக் கொண்டிருக்கிறார். வரியை செலவிடுபவர்கள் சுகபோகமாகச் செல்கின்றார்கள். இவ்வாறான நிலையில் எவ்வாறு வர்த்தகர்கள் வரி செலுத்துவார்கள். இந்த நிலையை மாற்றியமைப்போம். மக்களின் வரி சிறந்த முறையில் பயன்படுத்தப்படுமாயின் வரி செலுத்துவோர் முறையாக வரி செலுத்துவார்கள். இதற்கான சூழலை உறுதிப்படுத்துவோம்.

சுங்கம் மற்றும் இறைவரித் திணைக்களத்தில் இருந்து இதற்கான திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அரச சேவையாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அனைவரும் சிறந்த முறையில் மக்களுக்குச் சேவையாற்ற வேண்டும். ஊழல் முழுமையாக இல்லாதொழிக்கப்படும். ஊழல் என்பது பொருளாதாரக் குற்றம். ஆகவே, ஊழல் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுப்போம். எனவே,

அரச ஊழியர்கள் அனைவரும் தயவு செய்து பொறுப்புடன் செயற்பட வேண்டும். ஊழல் இருந்தால் வேலையில்லை, வீடு செல்ல வேண்டும். மன்னார் காற்றாலை மின்திட்ட உற்பத்திக்கு குறைவான விலையில் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. மக்களின் சுமைகளை தோளில் சுமந்துக் கொண்டு தொங்குபாலத்தில் செல்கின்றோம். ஒரு ரூபா கூட மோசடி செய்வதற்கு எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை. இது குடும்ப அரசோ அல்லது நண்பர்களின் அரசோ இல்லை. இது மக்களின் அரசு. பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி எதிர்கால இலக்கு நோக்கி பயணிக்கின்றோம். இதில் என்ன தவறுள்ளது. ஏன் இதனை மாற்றியமைக்க வேண்டும். தற்போதைய முன்னேற்றத்தை பலவீனப்படுத்தும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடியும். எம்மை ஆசிர்வதிப்பதும், ஏற்றுக்கொள்வது தவிர வேறொன்றும் எதிர்க்கட்சிகளுக்கு கிடையாது. ஊடகங்கள் அரசியல் செய்த காலம் முடிவடைந்துள்ளது. அதனால்தான் நான் ஜனாதிபதிபதியாகியுள்ளேன். ஊடக அரசியல் தோல்வியடைந்துள்ளது. மக்களுடனான எமது அரசியல்தான் வெற்றி பெற்றுள்ளது.

எவருடனும் எனக்கு தனிப்பட்ட பகைமை கிடையாது. ஆகவே தயவு செய்து மாற்றமடையுங்கள். நாட்டைக் கட்டியெழுப்பும் அரிய வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது. இதனைச் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்வோம். சுதந்திரத்துக்குப் பின்னர் கிடைத்த அனைத்து வாய்ப்புக்களையும் தவறவிட்டோம். பெருந்தோட்ட மக்கள் மற்றும் வடக்கு மக்களை இணைத்துக் கொண்டு பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டது. 1948 ஆம் ஆண்டு கிடைத்த சிறந்த வாய்ப்பை முறையாக பயன்படுத்திக் கொண்டிருந்தால் முன்னேற்றமடைந்திருக்கலாம். ஆகவே, தற்போதைய அரிய வாய்ப்பு ஒருபோதும் பலவீனமடையப் போவதில்லை. நாட்டை முன்னேற்றும் இலக்கை வெற்றிகொள்வோம். இந்தச் சிறந்த வாய்ப்பில் எதிர்க்கட்சிகளும் பங்குதாரர்களாக வேண்டும் என்று அழைப்பு விடுகின்றேன் - - என்றார்.






# கற்பிட்டி பிரதேச சபை தேர்தலில் 31 உறுப்பினருக்கு 340 பேர் போட்டி

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அவுட்

(சியாஜ்)

எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெற உள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கற்பிட்டி பிரதேச சபைக்கான 31 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு 08 அரசியல் கட்சிகள் மற்றும் இரு சுயேச்சை குழு என 340 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

கற்பிட்டி பிரதேசசபைத் தேர்தலுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் என 13 கட்சிகள் கட்டுப்பணம் செலுத்திய நிலையில் வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்படும் வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரையான காலப்பகுதிக்குள் ஐக்கிய தேசிய கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சமாதான கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, நல்லாட்சிக்கான தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, சர்வஜன அதிகாரம் என ஒன்பது அரசியல் கட்சிகளும் எச்.எம்.எம் பைறூஸ் மற்றும் டி கெமுனு தலைமையிலான ,ரு சுயேச்சை குழுக்கள் வேட்புமனு தாக்கல் செய்தன. இதில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் வேட்புமனு மாத்திரம் நிராகரிக்கப்பட்டதுடன் ஏனைய 08 அரசியல் கட்சிகள் இரு சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

கற்பிட்டி பிரதேச சபைக்கு 17 வட்டாரங்களில் இருந்து 19 உறுப்பினர்களும் போனஸ் உறுப்பினர்கள் 12 என 31 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு இம்முறை 91,162 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# உலக வாய் சுகாதார தினத்தை முன்னிட்டு கல்முனையில் பற்சிகிச்சை முகாம் நடந்தது

(பாறுக் ஷிஹான்)

உலக வாய் சுகாதார தினத்தையொட்டி கல்முனை பிராந்திய வாய் சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த பற்சிகிச்சை முகாம் வெள்ளிக்கிழமை கல்முனை எலிசபெத் பாலர்பாடசாலையில் இடம்பெற்றது.

'மகிழ்ச்சியான வாய் மகிழ்ச்சியான உள்ளம்' எனும் தொனிப்பொருளில் கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் என்.ரமேஷ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

கல்முனை பிராந்திய வாய் சுகாதார பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் யூ.ஹபீப் முஹம்மட், பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், பிராந்திய தொற்றா நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஐ.எம்.எஸ்.இர்ஷாத், பிராந்திய தாய்சேய் நலன்பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.எச்.றிஸ்பின்,



பல் வைத்திய நிபுணர் எம்.எம்.பைறூஸ், மேற்பார்வை பாடசாலை பற்சிகிச்சையாளர் கே.ஜனலோஜினி மற்றும் சுகாதாரத்திணைக்கள உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பல் பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் வாய் சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் இடம்பெற்றது.

உலக வாய் சுகாதார தினத்தினையொட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய வாய் சுகாதார பிரிவு பற்சிகிச்சை முகாம், விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் உள்ளிட்ட பல்வேறு வேலைதிட்டங்களை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதான தபால் நிலையங்களில் கற்பகம் காட்சிக் கூடங்கள்

## நிறுவ நடவடிக்கை

(சுபேசன்)

பிரதான தபால் நிலையங்களில் கற்பகம் காட்சிக் கூடங்களை நிறுவ பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் முதற்கட்டச் செயற்பாடாக வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணம் பிரதான தபால் நிலையத்திற்கு பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் வி.சகாதேவனுடன், சபையின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் ப.சுதாகரனும் நேரடியாகச் சென்று கற்பகம் காட்சிக்கூடம் நிறுவுவதற்கான ஏது நிலைகள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்துள்ள நிலையில் ஒரு வார காலத்திற்குள் மேற்படி திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளது.

யாழ் பிரதான தபால் நிலைய அதிபர் திருமதி சாந்தகுமாரி பிரபாகரனுடைய பெறுமதிமிக்க ஆலோசனைக்கு அமைவாக பனை அபிவிருத்திச்சபை குறித்த செயற்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்; -

தபால் நிலையங்களில் கற்பகம் காட்சிக்கூடம் நிறுவும் செயற்திட்டம் வெற்றியளித்தால் அது சிறிய அளவிலான விற்பனை மற்றும் உற்பத்தியாளர்களுக்கு மிகப்பெரியதொரு வாய்ப்பாக அமையும்.அத்துடன் சிறிய அளவிலான ஏற்றுமதிச் சந்தையை செய்ய எதிர்பார்த்திருப்பவர்களுக்கும் உரிய தீர்வாக அமையும்.

மேலும் ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான மாதிரிகளை தர நிர்ணயத்தோடு உடனடியாக பெற்றுக்கொள்ள முடிவதுடன ;- அரச வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தும் புதிய அரசாங்கத்தின் கொள்கைத் திட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாகவும் இப் புதிய திட்டம் அமைந்துள்ளது. - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# வரலாற்றுச் சிறப்புமிக்க மானிப்பாய் மருதடி விநாயகருக்கு கொடியேற்றம்

## ஈழத்திருநாட்டில் விநாயகர் திருக்கோவில்களில் முதன்மைத் தலமாக விளங்குவது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.

தமிழ்வேந்தர்காலத்துத்திருத்தலங்களிலொன்றாகப் போற்றப்படும் இத்தலம் பற்றிய பல்வேறு ஐதீக வரலாறுகள் கூறப்படுகின்றன. அருட்சிறப்பும் அற்புதமும் நிறைந்த மருதடி விநாயகர் ஆலயம் தனியாரின் பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு சென்ற நூற்றாண்டில் பொதுக்கோவிலாகப் பிரகடனம் செய்யப்பட்டு பொதுமக்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

காலம் தவறாத பூசை வழிபாட்டு ஒழுங்கு திருப்பணி வேலைகள் அறநெறிப்பாடசாலை ஆலய நிர்வாகம் என மிகவும் சிறப்பாக ஆலயத்தை நிர்வகித்து வருகின்றது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க மருதடி விநாயகர் ஆலயத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மகோற்சவம் இன்று (சனிக்கிழமை) நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி உற்சவம் தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் புதுவருடப்பிறப்பு தினமான எதிர்வரும் 14.04.2025 திங்கட்கிழமை இரதோற்சவமாகும்.

மின்னும் மருதடி வாழ் வேழமுகன் றாள் பணிந்து
பன்னுவவன் காதை பகர்ந்திடவே மன்னுபுகழ்
நீட்டு மலைமேல் றிகழ்பா ரதம்வரைந்த
கோட்டுமுகன் பாதங் குறி

என்று போற்றுகின்ற மருதடி விநாயகரின் அற்புதத்தைக் காண பல்லாயிரக்கனக்கான அடியவர்கள் மகோற்சவ காலத்தில் எம்பெருமானின் சந்நிதானத்துக்கு அலை அலையாக திரண்டு வருவார்கள்.

ஆண்டு தோறும் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்றுபல்லாயிரக்கணக்கானபத்தர்கள்புடைசூழ விநாயகப் பெருமானின் இரதோற்சவத்திருவிழா மிகச்சிறப்பாக நடைபெறும்.

மகிமை மிக்க மருதடியான் திருவருளைப் பெறுவதற்காக பல ஊர்மக்களும் நேர்த்திகளை நிறைவேற்ற இத்தலத்தை நோக்கி தினமும் வருவர்.

இவ்வாலயத்தில் மூன்றுகாலப் பூசைகள் காலந் தவறாது நடைபெறுகின்றன. ஒவ்வொருமாத்திலும் அமாவாசையையடுத்துவரும் சதுர்த்தி திதியில் விநாயகப்பெருமானுக்கு விஷேடபூசைகள் நடைபெறும் ஆவணி சதுர்த்தி தினமானது பெருமானது திருசந்நிதானத்தை பார்ப்பவர் கண்களை பூரிக்கச்செய்கின்றது.

இச்சதுர்த்தி 'தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர் யாவரும் வந்திவனேவல் செய்திடும்நாள்' ஆக போற்றப்படுகின்றது. கார்த்திகை மாதத்தில் விநாயகவிரதம்ஆரம்பமாகிஇருபத்தொருநாள்களாய் பிள்ளையார்கதை வாசிக்கப்பட்டு கடைசிநாளிலே கஜமுகாசூரசங்காரம்நடைபெறுவதுஇவ்வாலயத்தின் சிறப்புக்களில் ஒன்று.

மருதமரத்துப் பிள்ளையார் வருசத்திலே பங்குனிமாதத்தில் உற்சவம் ஆரம்பமாகி தமிழ்ச்சித்திரைப்புத்தாண்டு தினத்தன்று இரதோற்சவமாகக் கொண்டு ஆரம்பகாலத்தில் இருந்து 2004 ஆம் ஆண்டு வரை பதினெட்டு நாட்கள் உற்சவமும் 2004 உற்சவத்தையடுத்து புனரமைக்கப்பட்டு கருங்கற் கோவிலாக மீண்டும் 2014 ஆம் ஆண்டில் புதுபொலிவு பெற்று 48 நாள்கள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்று அதனையடுத்து 25 நாள்களாக உற்சவ நாள்கள் மாற்றம் செய்யப்பட்டு 25 நாள்கள் மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மகோற்சவ காலங்களில் மெய்யடியார்கள் காவடி எடுத்தல் தீச்சட்டியெடுத்தல் அங்கப்பிரதட்சணம் செய்தல் அடியழித்தல் அள்ளுகாசும் தென்னம்பிள்ளையும் வழங்கல் பிள்ளை விற்று வாங்கல் மடிப்பிச்சை எடுத்தல் பட்டுச் சார்த்தல் தேவாரம் ஓதுதல் வடம்பிடித்தல் முதலான நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

இக்காலத்தில் புராண படனம் செய்தல் சமயப் பிரசங்கம் செய்தல் திருமுறைகள் ஓதுதல் ஓதுவார்களை அழைப்பித்து ஓதுவித்தல் முதலான சமய நிகழ்ச்சிகள் மக்களின் ஆன்மீக மேம்பாட்டிற்காக நடத்தப்படுகின்றன.மருத மரத்தடியில் வீற்றிருந்தருளும் விநாயகப்பெருமான் வேண்டும் அடியவர்க்கு வேண்டும் வரங்களினை வழங்கிக் கொண்டிருக்கின்றான்.

**பூவாழி மன்னர்மநு நீதி வாழி**
**புகலரிய மடமகளீர் நிறையும் வாழி**
**ஆவாழி அந்தணர்தங் கூட்டம் வாழி**
**அருமறைவே தாகமங்கள் புராணம் வாழி**
**ஓவாத தவங்கருணை விரதம் வாழி**
**உலகிலுள்ள சாரசரங்க ளனைத்தும் வாழி**
**மாவாழும் பிள்ளையார் திடரில் வாழும்**
**மருதடியிற் கணபதிதாள் வாழிவாழி.**
**என்று மகோற்சவ காலத்தில்**
**விநாயகப்பெருமானை மெய்யுருகி வழிபாடாற்றி**
**சைவர்களாக சைவ வாழ்வு வாழ்ந்து இம்மை**
**மறுமைப் பயன்களினை நாம் பெற்றுய்வோமாக.**

**பண்டிதர், சைவப்புலவர் எஸ்.ரீ.குமரன்**
**செயலாளர்**
**அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்.**




# மாட்டிறைச்சியின் விலையை 1700 ரூபாவாக குறைக்கவே தேர்தலில் போட்டியிடுகின்றோம்

## இறக்காமம் பிரதேச சபை சுயேச்சைக் குழுத் தலைவர் சமீம் தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

இறக்காமம் பிரதேச சபையில் தனித்து ஆட்சி அமைக்க முயற்சிக்கிறோம். இதற்காக மாட்டிறைச்சியின் விலையை 1700 ரூபாவாக குறைக்க இந்த தேர்தலில் சுயேச்சைக்குழு சார்பாக போட்டியிடத் தீர்மானித்துள்ளோம் என கால்பந்து சின்னம் சுயேச்சைக் குழுத் தலைவர் சட்டத்தரணி கே.எல்.சமீம் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்த பின்னர் அம்பாறை மாவட்ட செயலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் ,தனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர் -

அம்பாறை மாவட்டத்தில் இறக்காமம் பிரதேச சபையானது 3 ஆவது தேர்தலை முகம் கொடுக்கின்றது. ,தில் சுயேச்சைக்குழுவாக நாங்கள் போட்டியிடுகின்றோம்.கட்சிகளில் அவநம்பிக்கை காரணமாக நாம் சுயேச்சையில் களமிறங்கியுள்ளோம்.அதே வேளை இறக்காமம் பிரதேச வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்துவதும் அத்துடன் இறக்காமம் பிரதேசத்தில் மாட்டிறைச்சியின் விலையை 1700 ரூபாய்க்கு வழங்குவதும் எமது சுயேச்சைக் குழுவின் நோக்கமாகும். இறக்காமம் பிரதேச வைத்தியசாலையில் மகப்பேற்று பிரிவு இன்மையால் அம்பாறை பொது வைத்தியசாலையில் பதிவுகள் சிங்கள மொழியில் இடம்பெறுவதால் அகமது என்ற பெயர் முகம்மது எனவும் அன்சார் என்ற பெயர் கின்சார் என்றும் கபீப் என்ற பெயர் குபாப் என்றும் மாறி வருவதால் பாடசாலைக்கு மாணவர்களை சேர்ப்பதில் சத்தியகடதாசி தேடுகின்ற அவல நிலைக்கு இறக்காமம் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்.



இவ்வாறான உரிமை சார்ந்த பிரச்சினைகளை வென்றெடுப்பதற்காகவே எந்தவித கட்சித்தலைவர்களதும் அழுத்தமின்றி இம்முறை சுயேச்சைக்குழுவில் சுயமாக இயங்க தீர்மானித்துள்ளோம்.அத்தோடு இறக்காமம் மக்களின் நீதி நிர்வாகம் அம்பாறையுடன் இணைக்கப்பட்டிருப்பதால் மொழி ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளோம். நீதிமன்றத்தில் சுயமாக எமது மொழியில் அபிப்பிராயங்களை கூற முடியாமல் எமது மொழி உரிமை மீறப்பட்டுள்ளது. தமிழ் மொழி மூலமாக நிர்வாகம் இருக்கின்ற இறக்காமம் மக்களை நீதி நிர்வாக விடயங்களை அக்கரைப்பற்றுடன் இணைத்து தனியான சுற்றுலா நீதிமன்றத்தை ஏற்படுத்தி எமது மக்களின் வாழ்வில் வெளிச்சத்தை கொண்டு வருவதற்காகவே சுயேச்சைக்குழுவில் போட்டியிடுகின்றோம்.இது தவிர தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி எமக்கு ஒரு சவாலாக அமையாது.தேசிய மக்கள் சக்திக்கு முஸ்லீம் மக்கள் வாழ்கின்ற பகுதியில் செல்வாக்கு குறைந்து வருவதாக கள நிலைவரங்கள் தெரிவிக்கின்றன.

எமக்கு சர்வதேச தொடர்புகள் இருக்கின்றன. நிச்சயமாக எமது வட்டாரங்களை வெற்றி பெறுவதற்கான சகல முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளோம். இறக்காமம் பிரதேசசபையில் உள்ள 13 ஆசனங்களில் 5 முதல் 6 ஆசனங்களை நாம் பெறக்கூடிய சூழல் தற்போது எழுந்துள்ளது.அந்த வகையில் இறக்காமம் பிரதேசமக்கள் நம்பிக்கையுடன் ஆட்சியை ஒப்படையுங்கள்.ஊழலற்ற இறக்காமம் பிரதேச சபையினை நாம் உருவாக்குவோம் என்ற செய்தியை தெரிவிக்க விரும்புகின்றேன்.

இறக்காமம் பிரதேச சபையில் ஆண்டாண்டு காலமாக முஸ்லீம் கட்சிகள் போட்டியிட்டு வருகின்றன.தற்போது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகள் ,ம்முறை களமிறங்கியுள்ளன. ,ந்த கட்சிகள் கூட எமது சுயேட்சைக்குழுவிற்கு சவாலாக ,ருக்காது என நம்புகின்றேன்.,லகுவாக வெற்றியடையக் கூடிய வாய்ப்பு எமக்கு உள்ளது என சுயேச்சைக் குழுத் தலைவர் குறிப்பிட்டார்.



# அம்பாறை மாவட்டத்தில் 20 அரசியல் கட்சிகளும் 24 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனு தாக்கல்

(அபு அலா)

அம்பாறை மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக 20 அரசியல் கட்சிகளும், 24 சுயேச்சைக் குழுக்களுமாக மொத்தம் 44 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும், மாவட்ட அரசாங்க அதிபருமான சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.

அக்கரைப்பற்று மாநகர சபை, அம்பாறை நகர சபை, திருக்கோவில், அட்டாளைச்சேனை, இறக்காமம், தமண, உகன, நாமல் ஓயா, மஹா ஓயா, பதியத்தலாவ, காரைதீவு, அக்கரைப்பற்று, நிந்தவூர், சம்மாந்துறை, பொத்துவில், ஆலையடிவேம்பு, லகுகல, நாவிதன்வெளி, தெஹியத்தகண்டி ஆகிய 19 உள்ளூராட்சி சபைகளுக்கு வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, ஈ.பி.டி.பி ஆகிய பிரதான கட்சிகள் உட்பட சுயேச்சைக்குழுக்களும் தங்களது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

இம்முறை அதிகமான சுயேச்சைக்குழுக்கள் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் போட்டியிடவுள்ளன. இதில் சம்மாந்துறை பிரதேச சபையை இலக்காகக் கொண்டு களமிறங்கியுள்ள நாபீர் பவுண்டேஷன் சுயேட்சைக் குழு சம்மாந்துறை பிரதேச சபையை அறுதிப் பெரும்பான்மையால் கைப்பற்றுவதற்கான மக்களின் பெரும் ஆதரவு பாரியளவு இருப்பதை அவதானிக்க முடிகிறமையும் சுட்டிக்காட்ட வேண்டிய விடயமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் அம்பாறை, சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில் ஆகிய 4 தேர்தல் தொகுதிகளிலும் 19 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. ,தில் கல்முனை மாநகர சபை தவிர்ந்த 19 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கலந்தாய்வு



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை பிராந்தியத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைகளின் சேவைகளை மதிப்பீடு செய்து பொதுமக்களுக்கு இலகுவான இணைந்த சேவையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனுக்கும், தனியார் வைத்தியசாலை உரிமையாளர்களுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று பிராந்திய பணிமனையில் இடம்பெற்றது.





இதன்போது கண் சத்திர சிகிச்சை உள்ளிட்ட நோய்கள், விசேட வைத்திய நிபுணர்களின் சேவைகள், வைத்தியசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர் கலந்து கொண்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.03.2025இல் வெளியிடப்பெற்றது